Registered as a Newspaper

தற்காலிக இடம் மாற்றம்
ராஜன் புத்தகசாலை
பஸ்ரூட், 764, பலாலி வீதி,
(தபால் பெட்டியடி)
ராஜன் அகம்
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி,
வார, மாத சஞ்சிகைகள்,
கதைப்புத்தகங்கள்
பெறலாம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

யாழ்.
ராஜன் புத்தகசாலையின்
முக்கிய அறிவித்தல்
தற்போது எமது நிலையம்
திருநெல்வேலியில்
இயங்குகிறது.
வழமையான
வாடிக்கையாளர்கள்
உட்பட சகலரையும்
உடன் அழைக்கின்றோம்.
ராஜன் அகம்
திருநெல்வேலி

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஷூ வைகாசி மீ 21 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 6 (04 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 162

பிந்தியசெய்தி கச்சதீவுக்கு அருகே இலங்கைக் கடற்படையால் 5 மணி நேரம்

# தடுக்கப்பட்ட படகுகள் திரும்புகின்றன; திட்டமிட்ட செயல் என இந்தியா கண்டனம்

சென்னை, ஜூன் 4

யாழ் குடாநாட்டுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நேற்று நண்பகல் இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட 19 இயந்திரப் படகுகள் அணியும் ஒரு கப்பலும், கச்சதீவுக்கு அருகே வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினரால் மாலை 5 மணிக்கு தடுத்து நிறுத்தப்பட்டன.

இது ஸ்ரீலங்கா கடற்படையின் திட்டமிட்ட செயல் என்று இந்தியா கண்டனமும், கவலையும் தெரிவித்திருக்கிறது.

இந்திய முயற்சிகள் பலிக்காததையடுத்து இந்தப்படகுகள் நேற்று நள்ளிரவு இந்தியாவுக்குத் திரும்பிக்கொண்டிருந்ததாக பி. பி. சி. அறிவித்தது.

ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருக்கடி நிலைமை ஏற்படக் கூடிய ஆபத்து உருவாகி வருகிறது.

இதே வேளை இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றத்தைத் தணிக்க ராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 19 இயந்திரப் படகுகள் இராமேஸ்வரத்தில் இருந்து நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டன. செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், டாக்டர்கள், பலநாட்டுச் செய்தியாளர்கள் ஆகியோர் பயணம் செய்யும் கப்பல் ஒன்றும் படகுகள் அணியுடன் வந்தது. இவை எல்லாவற்றிலும் செஞ்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெயில் சிங்குக்கு நேற்று அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 4

நிவாரணப் பொருள்களுடன் இந்தியப் படகுகள் அணி யாழ்ப்பாணம் செல்வதால் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி இந்திய ஜனாதிபதி ஷெயில் சிங்குக்கு நேற்று எடுத்துச் சொல்லப்பட்டது.

வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கமளித்தார்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் திரு. ஷெயில் சிங் ஆவார்.

பின்னர் ஜனாதிபதி சங்கத்தின் உபதலைவரும் மனிதவள மேம்பாட்டுத் துறை, சுகாதார அமைச்சருமான நரசிம்மராவுடன் தொடர்புகொண்டு பேசினார்.

அதன் பின்னர் அமைச்சர் நரசிம்மராவ் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசினார்.

இந்திய அரசின் முயற்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் பூரண ஆதரவு தெரிவித்தனர்.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் வருமாறு;

ஜனதா தலைவர் மது தண்டவதே, பாரதிய ஜனதா தலைவர் அதால் பிகாரி வாஜ்பாய், தெலுங்குதேசம் கட்சி பிரமுகர் மாதவரெட்டி,

(2 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் பொருள்கள் விநியோகம்

புதுடில்லி, ஜூன் 4

படகுகளில் கொண்டு வரப்படும் நிவாரண உதவிகளைப் பாதிக்கப்பட்ட யாழ் குடா தமிழருக்கு விநியோகிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உதவ முன் வந்துள்ளது.

யாழ் செஞ்சிலுவைச் சங்கம் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துக்கு இது பற்றி அறிவித்திருப்பதாக இந்திய வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர் ஒருவர் நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அங்கீகாரம் பெற்றது யாழ் சங்கம்.

19 படகுகளும் ராமேஸ்வரம் கரையில் இருந்து புறப்படும் முன்னர் அவற்றில் இருந்த பொருள்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், நூறு வரையான பத்திரிகையாளர் சமுகத்தில் சோதனை இட்டனர். (அ-எ)

## நிவாரண உதவியை தடுப்பது ஜே. ஆரின் ஆணவத்தைக் காட்டுகிறது

—எம். ஜி. ஆர்.

சென்னை, ஜூன் 4

இந்திய அரசின் நிவாரண உதவிகளை வழங்கவிடாது தடுப்பது இலங்கை அரசின் காட்டுமிராண்டித்தனமான, ஆணவப்போக்கை எடுத்துக் காட்டுகின்றது.

இப்படி முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று விடுத்த அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இனப்பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் அணுகாது, இராணுவ ரீதியில் அணுகுவது ஜெயவர்த்தனா அரசின் உண்மைச் சொரூபத்தை எடுத்துக் காட்டுகின்றது.

பிரதமர் காந்தியும் அவரின் அரசும் மனிதாபிமான முறையில் செயற்பட்டு உணவு வகைகள், உயிர்காக்கும் மருந்துகளை அனுப்ப முடிவு செய்திருப்பது பாராட்டுதற்குரியது.

மனித உணர்வுள்ள ஒவ்வொருவராலும் இது

(2 ஆம் பக்கம் பார்க்க)

## படகுகள் அணியை கண்காணிக்க புதுடில்லியில் விசேட கட்டுப்பாட்டு அறை

புதுடில்லி, ஜூன் 4

இந்தியப் படகுகள் அணி யாழ்குடா செல்லுவதை நிமிடத்துக்கு நிமிடம் கண்காணிக்க புதுடில்லி வெளிவிவகார அமைச்சின் விசேட கட்டுப்பாட்டு அறை ஒன்று இயங்கி வருகின்றது.

இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட படகுகள் அணி, புறப்பட்டதில் இருந்து, யாழ் சென்று திரும்புவது வரையிலான நடவடிக்கைகளை உடனுக்குடன் அவதானித்துக் கொள்வதற்காக இவ்விசேட கட்டுப்பாடு நிலையம் அமைக்கப்பட்டதாக வெளியுறவுப் பேச்சாளர் ஒருவர் புதுடில்லியில் நேற்றுத் தெரிவித்தார். (அ-எ)

## தமிழீழ விடுதலைப் போராட்டம் அழிக்கப்படாதது; உறுதியானது

### தொலைத் தொடர்பு நிலைய தாக்குதல் குறித்து பிரபா அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 4

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்றுமே அழிக்கப்படாத உறுதியான ஒரு போராட்டம் ஆகும்.

தமிழீழப் போராட்டத்தின் வெற்றிக்காகவும், வெற்றியை உலகுக்கு பறைசாற்றவுமே யாழ். தொலைத் தொடர்பு நிலைய மினி இராணுவ முகாம் மீதான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தாக்குதலை அடுத்து முகாமுக்குள் புகுந்த எமது வீரர்கள் பல இராணுவத்தினரை சரணடையச் செய்து முகாமை தமதுகட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

மிக நவீனரக ஆயுதங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### மூவர் பலி 42 பேர் காயம் என்கிறது அரசு

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ். தொலைத்தொடர்பு திணைக்களத்தின் மீது நேற்று போராளிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 42 பேர் காயமடைந்தனர் என்றும் அரசு அறிவித்துள்ளது.

இச் சம்பவத்தில் தொலைத் தொடர்பு

(2 ஆம் பக்கம் பார்க்க)

### கொமாண்டோ ஐவர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 4

வந்தாறுமூலையில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்.

ஆறு பேர் படுகாயம் அடைந்தனர். (இ-10)

### கேரள அரசு 15 லட்சம் ரூபா நிதி உதவி

சென்னை, ஜூன் 4

இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு கேரள மாநில அரசு பதினைந்து லட்சம் ரூபா நிதி உதவி அளித்திருக்கிறது.

முதலமைச்சர் இ. கே. நாயனார் நேற்று இதனை அறிவித்தார்.

இதனிடையில் திராவிடமுன்னேற்றக் கழகம் ஒரு லட்சம் ரூபா நன்கொடை வழங்கியது.

பிரதம மந்திரி ஊடாக இந்தப் பணம் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும்என்று தி. மு. க. தலைவர் கருணாநிதி அறிவித்தார். (இ-எ)

## எனது குருநாதரே என்னைக் காப்பாற்றினார்

### நல்லை முதல்வர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 4

நேற்றைய ஹெலித் தாக்குதல் சம்பவத்தின் போது எனது உயிரைக் காப்பாற்றியவர் எனது குருநாதரே.

நல்லை ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று அதிகாலை யாழ்நகரில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதலில் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்த நிலையில் இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவர் தமக்கு நேர்ந்த அனுபவம் பற்றி மேலும் கூறியதாவது:-

நல்லை ஆதீனம், கந்தன்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்குள்ளான முகாமைப் பார்க்க சென்றோர் மீது சூடு!

யாழ்ப்பாணம், ஜூன் 4

புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான யாழ். தொலைத் தொடர்பு நிலையஇராணுவமுகாமை பார்வையிடச் சென்றவர்கள் மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

நேற்று புதன்கிழமை காலை 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதன் காரணமாக மூன்றுபேர் காயமடைந்தனர்.

எம். சிறிதரன் (வயது 18) எஸ். உமாசங்கர் (வயது 17) ஆகிய இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-ள-10-7)

இந்தியப் படகுகள் விவகாரம்:

## அமைச்சரவை நேற்று மீண்டும் ஆராய்ந்தது

கொழும்பு, ஜூன் 4

இந்தியப் படகுகள் அணி யாழ் வருவது குறித்து அமைச்சரவை நேற்று மீண்டும் ஆராய்ந்தது.

கூட்டத்துக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா தலைமை வகித்தார்.

கூட்ட முடிவில் அறிக்கை ஒன்றை அரசு விடுத்தது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:-

இலங்கைக் கடற் பிராந்தியத்துக்குள் அனுமதியின்றி பிரவேசிக்கும் படகுகள் மீது இலங்கை அரசின் சட்டங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் படகுகள் இலங்கை அதிகாரிகளின் பணிப்புரைகளுக்கு அமையவே நடக்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கைதானோரில் 2000 பேர் பலாலிக்கு?

கரவெட்டி, ஜூன் 4

வடமராட்சிப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட சுமார் ஆறாயிரம் பேர் வரை பருத்தித்துறை இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு விசாரணையின் பின்பு சுமார் 4000 பேர்வரை விடுதலை செய்யப்பட்டனர்.

மிகுதி இரண்டாயிரம் பேர்வரை கப்பல்களில் ஏற்றப்பட்டு காங்கேசன் துறைமுகம் ஊடாக பலாலிக்கு கொண்டு செல்லப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது. (இ-70)

## இன்றும் ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 4

இன்றும் ஊரடங்கு வழமைபோல் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (உ-ள)

## சுபநேரம்

04-06-19 87

வியாழக்கிழமை

சுபநேரம்:-

7.22 முதல் 8.52 வரை

ராகுகாலம்:-

1.22 முதல் 2-52 வரை.

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

காலை 8-35முதல் அட்டமி

செய்தி ஒளி



திரும்பிப் போற போக்கு சரியில்லைப் பாருங்கோ.........!

## ஜே. ஆர். மீது ராஜீவ் பாய்ச்சல்

புதுடில்லி, ஜூன் 4

யாழ் குடாநாட்டு நிலையை பஞ்சாப்புடன் ஒப்பிட்டுப் பேசியதற்காக இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தைப் போல பஞ்சாப்பில் பொம்மர், ஷெல் தாக்குதல்கள், வன்முறைகள் நடத்தப்படவில்லை என அவர் நேற்று தெரிவித்தார். (உ)

## தமிழகத்தில் பட்டினி; நிவாரண உதவியை அங்கே கொடுங்கள்

### இலங்கை அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 4

இலங்கையில் பட்டினி இல்லை. நாம் நிவாரண உதவி ஏதும் கேட்கவும் இல்லை. தமிழ்நாட்டில் தான் பட்டினி நிலவுகிறது. உங்கள் நிவாரணப் பொருள்களை அங்கே கொண்டுபோய்க் கொடுங்கள்.

— இப்படி கச்சதீவில் இந்திய படகுகள் அணியை தடுத்து நிறுத்திய இலங்கைக் கடற்படை அதிகாரிகள் தெரி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. செயலாளருடன் ஹமீத் தொடர்பு

குடாநாட்டு மக்களுக்கு இந்திய அரசு நேரடி நிவாரண உதவி வழங்க முயற்சித்திருப்பதால் எழுந்துள்ள நிலைமைகுறித்து வெளிவிவகார அமைச்சர் சாகுல் ஹமீத் ஐ. நா. செயலாளருடன் அவசரமாகத் தொடர்புகொண்டு அவருக்கு விளக்கமளித்திருக்கிறார்.

தற்போதைய நிலையை ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தலைவரினதும், ஏனைய உறுப்பினர்களினதும் கவனத்துக்குக் கொண்டுவருமாறு அவர் ஐ. நா. செயலாளரைக் கேட்டிருக்கிறார். (உ)

## சீனு கண்டனம்

கொழும்பு, ஜூன் 4

இலங்கையின் தன்னுதிக்கத்தில் வேறு எந்த நாடும் தலையிடுவதற்கு உரிமையில்லை. அப்படித் தலையிடுவது கண்டனத்திற்கு உரியது.

-இப்படி இந்தியாவை மறைமுகமாகக் கண்டித்திருக்கிறது சீனு.

சீன தென்விவகார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார். (உ-ள)

## செய்தியாளர்களின்றி வர அதிகாரி மறுப்பு

கச்சதீவுக்கு அருகே இந்தியப் படகுகள் தடுத்து நிறுத்தப்பட்ட போது அந்த விடயம் பற்றிப் பேசுவதற்காக படகுகள் அணியின் பொறுப்பதிகாரி டி. எஸ். மைத்ரேயை தமது கப்பலுக்கு வருமாறு இலங்கைக் கடற்படை அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்,

படகுகள் அணியுடன் கூடவே வந்த வெளிநாட்டுச் செய்தியாளர்களையும் தன்னுடன் வருவதற்கு அனுமதித்தால், தான் இலங்கைக் கடற்படைக் கப்பலுக்கு வருவதாக அவர் பதிலளித்தார்.

ஆனால் அவரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அதனால் அவர் இலங்கைக் கடற்படைக் கப்பலுக்கு செல்ல மறுத்துவிட்டார். (உ)

## பாக்கு நீரிணையில் யுத்தக் கப்பல்கள்

வாஷிங்டன், ஜூன் 4

பாக்குநீரிணையில் இந்திய யுத்தக் கப்பல்கள் ரோந்து புரிகின்றன என்று வோய்ஸ்ஒப் அமெரிக்கா வானொலி நேற்று இரவு அறிவித்தது.

இரண்டு அதிவிரைவு கப்பல்கள், ஒரு நாசகாரி உட்பட இந்திய யுத்தக் கப்பல்கள் பாக்கு நீரிணையில் ரோந்துபுரிகின்றன.

— இப்படி அந்த வானொலி மேலும் அறிவித்தது. (உ-ள)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சிங்கத்தோடு விளையாடும் சுண்டெலியா?

யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு, 19 இயந்திரப் படகுகள் நேற்று நண்பகலில் இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டதாகச் செய்திகள் வந்துள்ளன.

ஸ்ரீலங்கா அரசின் அனுமதியின்றி, நிவாரணப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும் இந்தியாவின் தன்னிச்சையான செயல் சரிதானா?

இது ஸ்ரீலங்காவின் தன்னாதிக்கத்தையும், இறைமையையும் பாதிக்கும் செயல் அல்லவா? இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது போன்றதல்லவா? அதன் உரிமையை அவமதிக்கும் செயல் அல்லவா?

இவ்வாறு பல கேள்விகள் பல தரப்புகளிலிருந்தும் எழுப்பப்படுகின்றன.

இந்தியாவின் நிவாரண உதவி எந்தவிதமான சூழ்நிலையில் வழங்கப்படுகிறது. அது எவ்வளவுக்கு நியாயமானது என்பதை நேற்று இப்பத்தியில் தெளிவுபடுத்தி இருந்தோம்.

இந்தியாவின் நிவாரணஉதவியானது காலத்தால் செய்யப்படும் பெரும் உதவி என்றும் விவரித்திருந்தோம். கஷ்டத்தில் உள்ள ஒருவனுக்கு மனிதாபிமான ரீதியில் உதவுவது இறை தொண்டுக்குச் சமமானதாகும்.

அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்கவும், நிவாரணம் வழங்கவும் என்று வெளிநாடுகள் ஏற்கனவே அன்பளிப்புச் செய்த பொருள்களில் தமிழர்களுக்குக் கிடைத்தவை மிகச் சொற்பமே.

இப்படியிருக்க ஸ்ரீலங்கா அரசாங்கம் இந்தியா வழங்கும் நிவாரணப் பொருள்களை தன்னூடாக வழங்க வேண்டும் என்று கேட்பதற்கு என்ன உரிமை உண்டு?

இந்திய நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வள்ளங்கள் யாழ்ப்பாணம் நோக்கி வருவது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகி விட்டது. இலங்கையும் இந்தியாவும் மோதிக்கொள்ளும் அளவுக்கு நிலைமையும் மோசமாகி விட்டது. இந்தியப் படகுகளை தனது எல்லைக்குள் வரவிடாது ஸ்ரீலங்கா தடுத்து விட்டது.

இந்தியாவை பெரிய சகோதரர் என்றும், ஸ்ரீலங்கா மீது குதிரை விடப் பார்க்கிறது என்றும் இங்குள்ள அரசியல் தலைவர்கள் நையாண்டி செய்து, இந்திய எதிர்ப்புப் பிரசாரம் புரிந்து வருகின்றனர்.

இந்தியாவை எதிர்ப்பதால் ஏற்படக் கூடிய விளைவுகளை உணராமல் இந்தியாவுடன் முட்டி மோத முனைகிறது ஸ்ரீலங்கா.

பாகிஸ்தான், சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் நட்புறவாகி இந்தியாவுடன் மோத முனைகிறது.

சிங்கத்துடன் விளையாட முனையும் சுண்டெலியின் முயற்சி இது!

# தமிழர்கள் எதிரிகள் என்றே பயிற்சியின்போது கூறப்பட்டது

## நேற்றுப் பிடிபட்ட சிப்பாய்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 4

நாங்கள் காணும் தமிழர்கள் எல்லாம் எமது எதிரிகள் என்றே எமக்கு பயிற்சி வழங்கும்போது எமது உயரதிகாரிகள் அறிவுறுத்துகின்றனர்.

நேற்று யாழ் தொலைத்தொடர்பு நிலையம் மீதான தாக்குதலில் புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்ட மூன்று இராணுவச் சிப்பாய்களும் இவ்வாறு தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டோர் விபரம் வருமாறு: -

அரம்பவலகமகே நிமால் (வயது 20)–அகங்கம, காலி,

விஜயநமகே சுனிய் பியந்த (வயது 19) அனுராதபுரம்.

வன்னியாராச்சி கங்கானம் கே சுனில் (வயது 20) தெமுத்காவ, அம்பாந்தோட்டை.

இவர்களை நேற்றுப் பத்திரிகையாளர்கள் சந்தித்தனர்.

பத்திரிகையாளர்களின் கேள்வியும் இவர்கள் தெரிவித்த பதிலும் வருமாறு:

கேள்வி:- நீங்கள் இராணுவத்தில் சேர்ந்த காரணம்?

நிமால்:- எனக்கு பெண் சகோதரங்கள் அதிகமாக உள்ளனர். வீட்டில் நிலவிய கஷ்டநிலை காரணமாகவே இராணுவத்தில் சேர்ந்தேன்.

பியந்த:- வேலை என்று ஒன்று தேவைப்பட்டது. அதனால் இராணுவத்தில் சேர்ந்தேன்.

சுனில்:- எனது சகோதரர்களில் ஒருவர் மனநோயாளி. அப்பா விவசாயி. குடும்பக் கஷ்டநிலை காரணமாகவே இராணுவத்தில் சேர்ந்தேன்.

கேள்வி: விடுதலைப் புலிகளிடம் நீங்கள் எப்படி அகப்பட்டீர்கள்?

பதில்: வெடிச்சத்தம் கேட்டதை அடுத்து அருகே இருந்த பாதுகாப்பு அறைக்குள் இருந்து நாம் வெளியே வர முயன்றோம். அப்போது புலிகள் எம்மைக் கைது செய்தனர்.

கேள்வி: இராணுவத்தில் நீங்கள் சேர்ந்து எவ்வளவு காலம்?

பதில்: நாங்கள் இராணுவத்தில் சேர்ந்து ஆறு மாதங்களே ஆகின்றன.

கேள்வி: எந்த இராணுவ முகாம்களில் உங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டன?

பதில்: தியத்தலாவையிலும் அம்பாவெல இராணுவ பயிற்சி முகாமிலும் நான்கு மாதங்கள் பயிற்சி எடுத்தோம்.

கேள்வி:- நீங்கள் மேற்கொள்ளும் ஷெல் தாக்குதலால் அப்பாவி மக்களே கொல்லப்படுகின்றனர். இதுபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

பதில்:- இப்படிச் செய்வதன் மூலம் தமிழர் பிரச்சினை எப்போதும் தீரப்போவதில்லை. எனினும் நாங்கள் தமிழர்களை அழிப்பதற்காக இதனைச் செய்வதில்லை. முகாமில் உள்ள உயரதிகாரிகள் கட்டளையிடும் போதே நாம் இதனைச் செய்கிறோம்.


கேள்வி:- விடுதலைப் புலிகள் பற்றி தங்கள் கருத்து?

பதில்:- விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் இலங்கை அரசாங்கம் தனது அரசை சரியான வழியில் கொண்டு நடத்த முடியாமல் திண்டாடுகிறது.

கேள்வி:- கோட்டையில் இருந்து வெளியே வர கடைசியாக எப்போது முற்பட்டீர்கள்.

பதில்:- கடந்த 27 ஆம் திகதி கூட 200க்கும் அதிகமானோர் வெளியேற முற்பட்டோம்.

இராணுவ உயரதிகாரிகள் முன்னே செல்ல மறுப்பதால் ஏனையவர்களும் முகாமைவிட்டு வெளியேறுவதற்கு அஞ்சுகின்றனர். (இ–10-7-ள)



சிறைபிடிக்கப்பட்ட சிப்பாய்கள்

## மூவர் வீரமரணம்



நிக்ஸன்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ் தொலைத்தொடர்பு நிலையத்தின் மீதான தாக்குதலில் தமிழீழவிடுதலைப் புலிகளைச் சேர்ந்த கப்டன் நிக்ஸன் (வயது 20) மூளாய் (தலைமையக முகாம் பொறுப்பாளர்), ரதன் கந்தர்மடம், அசோக் மன்னார் ஆகிய மூவரும் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (இ–10)

### மூவர்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தினுள் பெரும் தீ மூண்டதாகவும் பின்னர் தீ படையினரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் அரசு மேலும்அறிவித்துள்ளது.

காயம் அடைந்தவர்கள் கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் அரசு தெரிவித்தது.

விடுதலைப் புலிகளினால் சிறைப் பிடிக்கப்பட்ட மூன்று சிப்பாய்கள்பற்றி அரசு எதனையும் தெரிவிக்கவில்லை. (இ–10)

### நிவாரண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராட்டப்படவேண்டிய செய்கையாகும்.

தமிழக அரசும் மக்களும் இதனை மனமாரவரவேற்கின்றனர்.

இப்படியான நிவாரண உதவிகள் தொடர்ந்து இலங்கைத் தமிழருக்குக் கிடைக்க மத்திய அரசுக்கு தமிழக அரசு உதவும் — இப்படி முதலமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (அ–எ)

### டெல்லி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் (எஸ்) பிரமுகர் எஸ். உன்னி கிருஷ்ணன், லோக்தள் பிரமுகர் வீரேந்திர வர்மா, மார்க்ஸிய கம்யூனிஸ்ட் எம். பி.க்கள்; சைபுதீன் சௌத்ரி, ஹரிகிஷன்

### தமிழீழ - - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டரை மணி நேரமாக நீடித்தது.

யாழ் கோட்டை, மண்டைதீவு, பொலீஸ் விடுதி ஆகியவற்றில் இருந்தும் ஹெலிக்கொப்டரில் இருந்தும் மோட்டோர்த் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் முழுத் தியாக மனப்பான்மையுடன் எமது வீரர்கள் போராடினார்கள்.

இத் தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் எம்மால் கைது செய்யப்பட்டனர்.

ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

சில சிப்பாய்கள் மீள முடியாத அதிர்ச்சிக்கு உள்ளாகினர்.

கட்டட இடிபாடுகளுக்குள்ளும் பல சிப்பாய்கள் சிக்கினர்.

சரண் அடையாத இராணுவத்தினர் மீது சரணடையக்கோரி நாம் தாக்குதல் நடத்தினோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ–ள–10–7)

### எனது . . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயம், சிவன் கோயில் எல்லாவற்றையும் பொருட்படுத்தாது ஹெலி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

துப்பாக்கிச் சன்னம் ஒன்று எனது குருவின் படத்தையும் அதன் பின்புறம் இருந்த அனுமாரின் படத்தையும் துளைத்துக் கொண்டு என்னைத் தாக்கியது.

இதனால் சன்னத்தின் வேகம் குறைந்து நான் மயிரிழையில் உயிர்தப்பினேன்.

இவ்வாறு ஆதீன முதல்வர் கூறினர்.

(இ-7)

### அமைச்ச - - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவேண்டும்.

எவராவது இந்தப் பணிப்புரைகளுக்கு மாறாக இலங்கை மண்ணில் கால் எடுத்துவைக்கவோ பொருள்களைக் கொண்டுவந்து இறக்கவோ அனுமதிக்கப்படமாட்டாது.

எவராவது இந்த விதிகளுக்கு மாறாக இலங்கைக்குள் பிரவேசிக்க முற்பட்டால் அந்தச் செயல் இலங்கையின் சுதந்திரம், ஒருமைப்பாடு, தன்னாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிரான செயலாகவே கருதப்படும்.

இப்படி அரசாங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனராம்.

இந்திய படகுகள் அணியைப் பொறுப்பேற்று அழைத்துவரும் இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி டி. எஸ். மைத்ரேயிடமே கடற்படை அதிகாரிகள் இப்படித் தெரிவித்தனராம். (உ)

### கச்சதீவுக்கு- - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சிலுவைக்குறி பொறிக்கப்பட்டிருந்தது. படகுகளைத் தமிழக மீனவர்களே செலுத்தி வந்தனர்.

இந்த விவரங்கள் உதயனின் நேற்றையவிசேட பதிப்பில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

இந்தியப் படகுகள் அணி, கச்சதீவில் இருந்து இரண்டு மைல் தொலைவில் இலங்கைக் கடற் பிராந்தியத்தினுள் தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்திய படகுகள் அணியுடன் சென்ற இந்திய வெளியுறவு அதிகாரி டி. எஸ். மைத்ரேய படகுகள் தடுத்து வைக்கப்பட்டதை ஆட்சேபித்து இலங்கை கடற்படை அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டார்,

இதற்கிடையில்—

நிவாரண உதவிகள் கொண்ட படகுகளை இந்தியா யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியதால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணிப்பதற்கு ராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன—

புதுடில்லியில் இம் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## திரும்பி வராத 4 லொறிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

காங்கேசன்துறை களஞ்சியத்துக்கு மா பெறுவதற்காகச் சென்ற ப. நோ. கூ. சங்க லொறிகளில் நான்கு லொறிகள் இதுவரை திரும்பி வரவில்லை.

இவற்றில் இரு லொறிகளில் மா மூடை ஏற்றப்பட்டதும் சிப்பாய்கள் இந்த லொறிகளை பருத்தித்துறைக்குப் போகும் படிஉத்தரவிட்டனராம்.

இந்த இரு லொறிகளும் நல்லூர், வேலணை ப. நோ. கூ. சங்கங்களுக்குச் சொந்தமானவை.

திரும்பி வராத ஏனைய இரு லொறிகள் எந்த ப.நோ. கூ. சங்கங்களுக்குச் சொந்தமானவை என்பது தெரியவில்லை. (இ-7)


## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கறுத்த அல்சேசன் (ALSATIO`) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (1410)



## இடம்மாற்ற அறிவித்தல்

ஆஸ்பத்திரி வீதி, 180இல் இயங்கிவந்த குகன் ஸ்ரோர்ஸ் தற்போதைய சூழ்நிலை கருதியும் வாடிக்கையாளர் ஆதரவாளர் நன்மை கருதியும் இல. 1/18, கையிலாய பிள்ளையார் கோவில் பின்வீதியில் அமைந்துள்ள ''தேவிகா பிறிண்டர்ஸ்'' கட்டடத்தில் பாதுகாப்பான சூழ்நிலையில் இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

யாழ் மாவட்டத்தில் எமது பெயரில் வேறு கிளைகள் எமக்கு இல்லை.

என்றும் உங்கள்
சேவைக்கு காத்திருக்கும்

குகன் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்கள்

இல. 1/18, கையிலாயபிள்ளையார் கோவில் பின்வீதி, நல்லூர்.



## இடம் மாற்றம்

தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக மக்கள் பாதுகாப்பை முன்னிட்டு எமது ஸ்தாபனம் கீழ்வரும் முகவரிக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

த. குமாரசாமி
ரெக்ஸ்ரைஸ்ஸ்

இல, 272 (352), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(2850)



## அறிவித்தல்

### ஷப்ரு நிதி நிறுவனம்

ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் நிறுவனத்தின் யாழ்ப்பாணம், மானிப்பாய் அலுவலகங்கள் மறு அறிவித்தல்வரை அலுவலக நாட்களில் காலை 8 மணி முதல் நண்பகல் 1 மணி வரை அலுவலக வேலைகளுக்காகத் திறந்திருக்கும்.



JAFFNA COLLEGE
INSTITUTE OF TECHNOLOGY
Vaddukoddai.

கல்வி ஆண்டு 87/88

புதிய தொழிற்கல்வி, தொழில்நுட்ப டிப்புளோமா பயிற்சி வகுப்புகளுக்கு சேர விரும்பும் இளைஞர்களும், யுவதிகளும் 12-6-87 வரை விண்ணப்பிக்கலாம்.

நேர்முகப்பரீட்சை — 12-6-87 வெள்ளிக்கிழமை 9-00 மணிக்கு காரியாலயத்தில் நடைபெறும்.

—பணிப்பாளர்


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



வேலணை கிழக்கு
உயர் திரு. கனகசபை தம்பிராசா
(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்னை மடியில்:- 15. 04. 1914
ஆண்டவனடியில்:- 05. 05. 1987

அன்பின் உருவே! எம்மைவிட்டுப் பிரிந்து 31 நாட்கள் ஓடிமறைந்து விட்டன. எம்மால் நம்பவே முடியவில்லை. எமதுள்ளம் உங்களைப் பிரியவில்லை. உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு அகலவில்லை. அகலவும் முடியாது. உங்கள் அன்பான உள்ளத்தை, பண்பான வார்த்தைகளை, துணிவான நெஞ்சத்தை, வஞ்சமில்லா உங்கள் வாழ்வை, நேரான நின் குணத்தை, சேவையிலே உங்கள் சிறப்பை, கடமையிலே நின் கண்ணியத்தை, உழைப்பிலே உங்கள் விடா முயற்சியை எம்மால் என்றும் மறக்க முடியாது.

எல்லோரின் அன்பையும் உங்கள் பண்பால் கவர்ந்தவரே! தொல்லை எதுவுமின்றித் துயர் துடைப்பாய் வல்லவரே! கள்ளமில்லா நின்பிரிவால் வாடுகின்றோம். உங்கள் ஆத்மா முத்தி பெற நாமெல்லாம் வேண்டுகின்றோம் இறைவனிடம்.

என்றும் உங்கள் அன்பு மறவாத
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
மைத்துனர்மார், மைத்துனிமார்,
உற்றார், உறவினர்கள்.

" இராசபதி "
இராசையா வீதி,
வேலணை-5

(1411)


HORIZON ENTERPRISES

## பிரயாண ஒழுங்குகள்

★ குவைத் ★ பாஹ்ரென்
★ ஓமான் ★ சவூதி

ஆகிய நாடுகளுக்கான அனைத்து வேலைவாய்ப்புடனும் செல்ல விரும்புவோர் உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

★ போக்குவரத்துச் சீரானதும் இங்கிருந்து பயணத்திற்கான முழு ஆயத்தத்துடனும் அனைவரையும் எம்முடன் அழைத்துச் செல்வோம்.

16 புகைப்படம், பாஸ்போட் சகிதம்
உடன்தொடர்புகொள்ளவும்.
மற்றும்
உங்கள் கடவுச்சீட்டு (PASSPORT) குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

★ எக்காரணம்கொண்டும் உங்களிடமிருந்து முற்பணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.

எமக்கு வடபகுதியில் வேறு கிளைகள் இடையாது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக எம்முடன் தொடர்புகொள்ள வேண்டிய நேரம் காலை 9 முதல் பி. ப. 3 மணி வரையில். நேரில் வரவும்.

A பத்மதாஸ்,
மதுரா வீடியோ கிளப்,
இல, 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

No. 87, 2/1, 2nd Floor,
Kollupitiya Lane,
COLOMBO - 3.
Phone: 574000
Telex: 21979 - 22118


## மஹோற்சவம் சை.ச.அ. போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாக இருந்த கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) மஹோற்சவம் ஜூலை முதலாம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

அதே சமயம் இம்மாதம் 7 ஆம் திகதி நடைபெற இருந்த சைவ சமய அறிவுப் போட்டியும் ஜூலை 5 ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டி

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 04-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Thursday June 04, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org